**பாராட்டுரை : நாடளவில் நடைபெற்ற அறிவியல் புத்தாக்கப் போட்டியில் முதல் பரிசுப்பெற்ற உங்கள் பள்ளி மாணவர்களைப் பாராட்டிப் பேசும் விதமாகப் பாராட்டுரை ஒன்றை எழுதுக.**

இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்
கின்பம் தரும்படி வாய்த்த நல் அமுது!

எனும் கவிர் பாரதிதாசன் கவிதை வரிகளை முன் வைத்து எனது உரையைத் தொடங்குவதில் பெருமை கொள்கிறேன்.

அவைத்தலைவர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய தலைமை ஆசிரியர் அவர்களே! அன்பிற்கினிய ஆசிரியர்களே! சக மாணவர்களே, நம் பள்ளியின் பெயரை தேசிய அளவில் மணம் வீசச்செய்த இளம் அறிவியல் ____________________ தமிழரசு மற்றும் இளவரசி அவர்களே உங்கள் அனைவருக்கும் இனிய வணக்கம்.

அவையோரே,

இன்று நமக்குப் பொன்னான நாள். நமது பள்ளியைச் சேர்ந்த மாணவர்களான தமிழரசு மற்றும் இளவரசி ____________________ நடந்த அறிவியல் புத்தாக்கப் போட்டியில் ______________________ வென்று வந்துள்ளனர். சுமார் ஐம்பத்து நான்கு பள்ளிகள் கலந்து கொண்டன. பெரும்பான்மையான பள்ளிகள் பட்டணத்துப் பள்ளிகளான போதிலும் ______________ பள்ளி மாணவர்களான நமது தோழர்கள் வென்று சாதனை படைத்தது நாடளவில் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது மறுக்கலாகாது.

அறிவியல் என்றால் நவீன இயந்திரங்களைக் கண்டுபிடிப்பது மட்டுமல்ல; மாறாக ________________ மூலிகைகளைக் கொண்டும் சாதனை படைக்கலாம் என்பதனை மலேசிய மக்களுக்கு உணர வைத்து தங்கள் பக்கம் திரும்பி பார்க்கச் செய்த இவர்களைப் புகழ எனக்கு __________________ கிடைக்கவில்லை சபையோரே. ஆம், எளிய முறையில் வீட்டிலேயே இயற்கை விவசாயம் செய்யும் வழிமுறைகளையும் இயற்கை மூலிகைகள் மூலம் ________________ மருந்து தயாரித்து தாவரங்களுக்கு எவ்வித சேதமுமின்றி ______________ வளரும் வழியையும் காட்டினர். நம் இளம் அறிவியலாளர்களின் இச்சாதனை மலேசியர்களை மட்டுமின்றி உலகமே கண்டு வியக்கச் செய்யும் காலம் மிக தூரமில்லை.

அன்பிற்கினியவர்களே,

தோழர்கள் தமிழரசுவும் இளவரசியும் படைத்த இச்சாதனையால் அவர்கள் மட்டும் பெருமை அடையவில்லை. மாறாக நம் ___________________ சிறப்படைய உள்ளது. என்ன நண்பர்களே, ஆச்சரியமாக உள்ளதா? ஆம், இவர்களைப் பாராட்ட நம் பள்ளிக்கு நமது கல்வி அமைச்சரே நேரில் வருகை புரிய உள்ளார். இது பெருமைக்குரிய செய்தி அல்லவா! “தோன்றின் புகழொடு.... எனும் திருவள்ளுவரின் குறள் வரிகளை மெய்பித்த நமது தோழர்களைப் ____________________ விடை பெறுகிறேன், நன்றி. வனக்கம்.

| | | | |
|---|---|---|---|
| வார்த்தைகளே | பூச்சிக்கொல்லி | நாடளவில் | |
| முதல் பரிசை | மேதைகளான | பாராட்டி | |
| செழித்து | இயற்கை | பள்ளியும் | தோட்டப் |

LIVEWORKSHEETS